# வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு - பாடம் - 2

நாம் அனைவரும் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழத்தான் விரும்புகின்றோம். அந்த வெற்றியின் மாபெரும் உன்னத நிலையை நாம் உணர்வது எப்பொழுது தெரியுமா? வெற்றியில் உண்மையான களிகூறுதலை அனுபவிப்பது எப்பொழுது தெரியுமா? நாம் அநேக தோல்விகளைச் சந்தித்து அதன்வழியாக சிறந்த பாடங்களைக் கற்றுக்கொண்டு, பல தோல்விகளுக்கு பிற்பாடு பெற்றுக்கொள்கிற வெற்றியின் மூலமாகவே மிக அதிகமான மகிழ்ச்சியை அடைகிறோம்.

‘‘நிழலின் அருமை வெயிலிலே தெரியும்’’ என்பார்கள். அதுபோலவே வெற்றியின் அருமை, பலவிதமான தோல்விகளை சந்தித்த பிற்பாடு பெற்றுக்கொள்கிற அந்த அனுபவத்தின் மூலமாகவே உணர முடிகிறது, அனுபவிக்க முடிகிறது. தோல்விகளினால் ஏற்பட்ட வேதனைகளும், பலவிதமான கஷ்டங்களும் வெற்றியின் மேன்மையை, அந்த வெற்றியின் உன்னத நிலையை உணர வைக்கின்றது.

நாம் நம்முடைய தேவனுக்குள் இப்பொழுது வாழ்கின்ற இந்த கிறிஸ்தவ ஜீவியத்திற்குள் வருவதற்கு முன்னே நம்முடைய வாழ்க்கையில் பலதரப்பட்ட தோல்விகளை சந்தித்து வந்திருக்கின்றோம். எதை எடுத்தாலும் தோல்வி, திருப்தி இல்லாத வாழ்க்கை, பலவிதமான பிரயாசங்கள் செய்து பார்த்தும் வெற்றி பெறுகிறது போன்ற உணர்வே ஏற்படுகிறதில்லை என்கிறதான நிலையிலேதான் நம்முடைய வாழ்வு காணப்பட்டது. ஆனால் இயேசுகிறிஸ்துவினிடத்தில் வந்த பிற்பாடு, அவர் தருகிற உன்னதமான அனுபவங்கள் மூலமாக முதலாவது வெற்றியுள்ள வாழ்வு என்றால் என்ன? என்பதனை புரிந்துகொள்கிற நிலைக்கு கடந்து வருகிறோம். அந்த உண்மையான வெற்றியின் மகிழ்ச்சியை கொஞ்சம் சொஞ்சமாக அனுபவிக்க ஆரம்பிக்கின்றோம். வாழ்க்கையில் பல தோல்விகளை கண்ட நமக்கு கிறிஸ்துவுக்குள்ளாக கிடைக்கப்பெறுகிற வெற்றி மிகப்பெரிய மகிழ்ச்சியை தருகிறதாய் இருக்கின்றது. பல சமயங்களில் நாம் தோல்விகளை உணர்வதற்கான உண்மையான காரணம் என்னவென்றால், வெற்றியின் உண்மையான இரகசியத்தை அறியாததே ஆகும். உண்மையாகவே வெற்றியுள்ள வாழ்வு வாழ்கிற அநேகருக்கு தாங்கள் வாழ்கிறது வெற்றியுள்ள வாழ்வுதான்

என்கிறது தெரியாத நிலையிலேயே இருக்கின்றது. வெற்றியின் உண்மைத் தன்மையை, வெற்றியின் இரகசியத்தை அறியாமல் இருக்கின்றதே, தோல்வியை உணர்கின்றதற்கும், தோல்வியை அனுபவிப்பதற்குமான காரணம் என்று கூறலாம். அநேகர் வெற்றியுள்ள வாழ்வு வாழ்ந்தாலும், எவ்விதமான மேன்மையான வாழ்க்கை வாழ்கின்றோம் என்று உணராததினாலேயே, தாங்கள் தோற்றுப்போனதாக எண்ணி, வெற்றியின் தன்மையை அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

கிறிஸ்தவ வாழ்க்கையில் வெற்றி என்பதின் அர்த்தத்தையும், அது எவ்விதமாக நமக்கு கிடைக்க பெறுகிறது என்பதையும், நாம் அறிந்து கொள்ள வேண்டியது நமக்கு அவசியமானதும், ஆசீர்வாதமானதுமாகவே இருக்கின்றது. வெற்றியுள்ள வாழ்வு வாழவேண்டும் என்பதுதான் நம் ஒவ்வொருவருடைய உள்ளத்தின் வாஞ்சையாக இருக்கின்றது.

## சிறுபிள்ளைகள் வெற்றிபெறவே விரும்புகிறார்கள்

ஓட்டப்பந்தயத்தில் ஓடி ஜெயித்து பரிசை பெற முடியாத நிலையிலும், தங்களிடமுள்ள ஏதாகிலும் ஒன்றை மற்றவர்கள் பறித்துக்கொள்ளும்போதும் பிள்ளைகள் அழுகின்றதை நாம் பார்க்கின்றோம். இது எதைக் குறிக்கின்றது. பரிசை பெற முடியாததினால் தோல்வியடைந்துவிட்டோம் என்றும், இழந்துவிட்டதினால் தோல்வியடைந்துவிட்டோம் என்றும் உணருகிறதினாலேயே என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

## பெரியவர்களும் வெற்றிபெறவே விரும்புகின்றனர்

பெரியவர்கள் தாங்கள் கூறுகின்ற கருத்துக்களை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளாதபோது, தோல்வியடைந்து விட்டோம் என்றே எண்ணுகின்றார்கள்.

ஆகவே, சிறுவர்களோ, பெரியவர்களோ அனைவருமே வெற்றியைப் பெறத்தான் விரும்புகின்றார்கள். இப்படியாக வெற்றிபெற வேண்டும் என்று எண்ணுகிறது நல்லதுதான். வெற்றி பெறுவதற்கான அந்த விருப்பம் உறுதியாக இருக்கும்போது நாம் அதைப் பெற்றுக்கொள்ள முழுமூச்சாக செயல்படுகின்றவர்களாக இருக்கின்றோம்.

வாழ்வில் எதில் வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணம் (Goal), நோக்கம் நாளுக்குநாள் மாறிக்கொண்டே வருகிறது. சிறுவயதாக இருந்தபோது, அதற்கேற்படி வெற்றிபெற விரும்பினோம். அடுத்து வாலிப பருவம் வந்தபோது, அந்த பருவத்திற்கு ஏற்ற நிலையில் வெற்றிபெற விரும்பினோம். வயதான நிலையிலும் குறிப்பிட்ட சில காரியங்களில் வெற்றி பெற விரும்புகிறோம். இவ்விதமாக வெற்றிபெறவேண்டும் என்பது பொதுவான நோக்கமாகவே எல்லோருக்கும் இருக்கின்றது.

சிறுபிள்ளையின் பருவம், வாலிப பருவம், முதியநிலை இப்படி அந்தந்த வயதுக்கு ஏற்றநிலையில் வெற்றிபெற்றாலும் கூட வாழ்விலே ஒருவிதமான வெறுமை காணப்படுகிற நிலையையே அநேகர் உணருகின்றார்கள். திருப்தி என்பதே ஏற்படாத நிலையிலேயே அநேகர் வாழ்கின்றார்கள். இமயமலையின் எவரெஸ்ட் சிகரத்தில் ஒரு கொடியை நாட்டிவிட வேண்டும் என்று விரும்பின ஒருவர், அவ்வாறு நாட்டிய பிற்பாடும் இவ்வாறாக சொல்லுகிறார், இதில் என்ன பெரிய விஷயம் இருக்கிறது? இதில் என்ன பெரிய உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது? என்று. சிலருக்கு குறிப்பிட்ட இந்த பதவி உயர்வு கிடைத்துவிட்டால், இல்லாவிட்டால் எதிர்பார்த்து காத்திருக்கிற பணிநியமான ஆணை வந்துவிட்டால், நான் வெற்றியுள்ள வாழ்வு வாழ்ந்து திருப்தியடைவேன் என்று கூறுகிறார்கள். ஆனால் இவைகளுக்கு பிற்பாடும் திருப்தி இல்லாத வெறுமை நிரம்பிய வாழ்க்கையையே அநேகர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

பிரியமானவர்களே இப்படியாக, பலவிதமான எதிர்பார்ப்புகளோடு காத்திருக்கிற அனுபவங்களும், காத்திருந்து பெற்றுக்கொண்ட மேன்மைகளை (வேலை, பதவி உயர்வு, அதிகாரம்) காத்துக்கொள்வதற்காக பண்ணுகிற யோசனைகளும், எண்ணங்களும் அதிகமாக பாரப்படுத்துவதினாலே பெற்றுக்கொண்ட வெற்றியை அனுபவிக்க முடியாதவர்களாக, தோல்வியின் எண்ணங்களை தங்களுக்குள்ளே மறைமுகமாக கொண்டவர்களாக, வெறுமையான வாழ்க்கையையே வாழ்கின்றனர்.

உலக வாழ்விலே நாம் அநேக வெற்றியை பெறுகிறதை முக்கியமாக கருதி செயல்பட்டு வெறுமையை சந்தித்து தோல்வியான எண்ணத்தோடு வாழ்வதைக் காட்டிலும், உண்மையான மகிழ்ச்சி இருக்கிற இடம் என்ன என்பதனை நாம் தெரிந்துகொள்ள வேண்டியது நமக்கு மிகவும் அவசியமானதாகும்.

உலகத்தில், உலக காரியங்களில் வெற்றிபெறுகிறது நமக்கு உண்மையான மற்றும் முழுமையான திருப்தியை அனுபவிக்கிற வாழ்க்கை அல்ல என்பதனை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

கிறிஸ்துவுக்குள்ளாக வாழ்கிற ஆவிக்குரிய வாழ்வில் நாம் பெறுதிறதான வெற்றியே உண்மையான மற்றும் முழுமையான திருப்தியுடைய வெற்றி வாழ்க்கையாகும். கிறிஸ்துவுக்குள்ளான ஆவிக்குரிய வாழ்வில்தான் நமக்கு உண்மையான வெற்றியிருக்கிறது என்பதனை நாம் ஆழமாக புரிந்துகொள்ள வேண்டும். நம்மைப் படைத்த கர்த்தாதி கர்த்தரோடு நாம் ஆவிக்குரிய விதத்தில் நல்ல தொடர்பும், உறவும் உடையவர்களாக இருக்கின்ற அனுபவமே நமக்கு உண்மையான வெற்றியைக் கொண்டுவரக்கூடியதாக இருக்கின்றது. முதலாவது தேவனோடு உறவுகொள்வதில் நம்முடைய ஆவிக்குரிய வாழ்வின் வெற்றி ஆரம்பம் பெற வேண்டும். நாம் ஆவிக்குரிய ஜீவியங்களில் பெற்று அனுபவிக்க இருக்கிற எல்லாவிதமான வெற்றிக்கும் தேவனோடுள்ள உறவே அடிப்படையானதும் மிகவும் முக்கியமானதுமாக இருக்கின்றது.

வெற்றியுள்ள வாழ்வு வாழ வேண்டும் என்று நீங்களும், நானும் கொண்டிருக்கிற விருப்பங்களைவிட, நிச்சயமாக, நாம் வெற்றியுள்ள வாழ்வு வாழ்ந்துதான் ஆகவேண்டுமென்று தேவனும் அதிக விருப்பமுடையவராக இருக்கின்றார். இது நமக்கு மிகவும் சந்தோஷமான விஷயமாகும். நீங்களும், நானும் தோல்வியான எண்ணத்தோடு வாழ்வதை தேவன் ஒருபோதும் விரும்புவதே இல்லை.

வேதத்திலுள்ள அனைத்து காரியங்களும், வேதத்தில் விளக்கிக் கூறப்பட்டு உள்ள அனைத்து சம்பவங்களும் ஒரு வெற்றியுள்ள வாழ்வு என்றால் என்ன என்பதையும், ஒரு தோல்வியான வாழ்வு என்பது எது என்பததையும் நமக்கு தெளிவுபடுத்துகிறதாய் இருக்கின்றது.

இஸ்ரவேல் ஜனங்கள் எப்பொழுதெல்லாம் தேவனுக்கு விரோதமாய் கலகம் பண்ணினார்களோ, எப்பொழுதெல்லாம் மற்ற தெய்வங்களை வணங்கினார்களோ, எப்பொழுதெல்லாம் தேவனை விட்டு விட்டு மற்ற தெய்வத்தை நோக்கி ஓடினார்களோ, அப்பொழுதெல்லாம் அவர்களுடைய வாழ்வு தோற்றுப்போன வாழ்வாக மாறியது.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்வு சில நேரங்களில் தோல்வியானதாக இருப்பதற்கும் இதுவே காரணமாக இருக்கின்றது. தேவனுடைய சித்தத்தை விட்டு விட்டு, மனித சித்தத்தை மற்றும் நம்முடைய சித்தத்தை நிறைவேற்ற நாம் முற்படுகின்றபொழுது, பொருளாசை உடையவர்களாய் விக்கிரக ஆராதனை செய்யும்போது, தோல்விக்கு நேராய் சென்றுகொண்டிருக்கிறோம் என்பதே உண்மை.

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாய் கலகம்பண்ணி, வேறே தெய்வங்களை பின்பற்றினபோது, சிதேக்கியா ராஜாவின் காலத்திலே தேவன் யூதாவை பாவிலோனுக்கு அடிமைப்பட்டு, சிறைபட்டு போகும்படி அனுமதித்தார்.

70 ஆண்டுகள் அவ்விதமாக அவர்கள் சிறைபிடிக்கப்பட்டு போனார்கள். 70 ஆண்டுகள் பாடுகள் பட்டார்கள். ஆனால் அந்த 70 ஆண்டுகளுக்கு பிறகு தேவன் அவர்களுக்கு வாக்குப்பண்ணினார். தங்கள் தேசத்திற்கு அவர்களை திரும்ப கொண்டுபோவதாக அவர்களுக்கு உறுதி கொடுத்தார். அவர்களை உற்சாகப்படுத்தும் வண்ணமாக எரேமியா தீர்க்கதரிசி மூலமாய் கர்த்தர் இவ்விதமாய் சொன்னார். எரேமியா 29:11ல், ‘‘நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார், அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்திற்கேதுவான நினைவுகளே’’ என்று நாம் வாசிக்க முடியும்.

ஒரு நம்பிக்கையை, ஒரு எதிர்காலத்தை தருகிற அந்த திட்டத்தை தேவன் உடையவராக, ஒரு செழுமைக்கு, ஒரு மகிழ்ச்சிக்கு சமாதானத்திற்கேதுவான, ஒரு திட்டத்தை உடையவராக நிலைகொண்டிருப்பதாக இங்கு தேவன் சொல்கிறார். ஆகவே இங்கு தேவன் சொல்ல விரும்புகிற விஷயம் இதுதான், நான் உங்களுக்கு ஒரு வெற்றியுள்ள வாழ்வை தர விரும்புகிறேன். அதுதான் என்னுடைய எண்ணம், நீங்கள் வெற்றியாக, செழுமையாக, நம்பிக்கையோடு சிறந்த எதிர்காலத்தை வாழவேண்டும் என்றே நான் விரும்புகிறேன் என்று கர்த்தர் சொல்லுகின்றார். நீங்களும் நானும் வெற்றிபெற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். யோசுவாவுக்கு சொல்லும்போது கூட அதே காரியத்தைத்தான் கர்த்தர் சொல்லுகின்றார். அதை நாம் யோசுவா 1:8ல் வாசிக்க முடியும், ‘‘இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும்

பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்.'' இந்த வசனத்தை நீங்கள் சற்று சிந்திக்கவேண்டும். அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய். இந்த வார்த்தையை கைக்கொள், இதன்படி செய்ய கவனமாயிரு, அப்பொழுது உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அதாவது நீங்கள் ஜெயமாய் இருப்பீர்கள், வெற்றியாய் இருப்பீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியது என்னவெனில், நாம் புத்திமானாய் நடந்து கொள்வதற்கு, ஒரு வெற்றியுள்ள வாழ்க்கையை நடத்துவதற்கு தேவன் விரும்புகிறார். ஆனால் இன்றைக்கு அநேகர் தவறான கருத்து உடையவர்களாய் இருக்கிறார்கள். தேவனிடத்தில் வந்தாலே தோல்விதான், தேவனிடத்தில் வந்தாலே சோதனைதான், எப்போதுதான் என் வாழ்வில் இந்த பாடுகளெல்லாம் நீங்க போகிறதோ? எவ்வளவு கஷ்டம், எவ்வளவு தோல்விகள்? என்னவெல்லாமோ செய்து பார்த்துவிட்டேன், வேதம் வாசித்தும் பார்த்துவிட்டேன், பல கூட்டங்களுக்கும்போய் பார்த்துவிட்டேன், வல்லமையான ஊழியர்களிடம் ஜெபம் பண்ணி பார்த்துட்டேன், இதுக்கு மேல நான் என்ன செய்ய முடியும். ஆனாலும் நான் இருக்கிற வண்ணமாகவே இருக்கிறேன். வெற்றி இல்லையே என்று நீங்கள் நினைப்பீர்கள் என்றால், பிரியமானவர்களே, நீங்கள் ஏதோ ஒரு இடத்துல தவறி இருக்க கூடும். அதை சரி செய்து கொள்ளப் போகிறீர்கள். இந்த பாடத்தின் மூலமாக ஒரு வெற்றியுள்ள வாழ்வை நீங்கள் சுதந்தரிக்கவே போகிறீர்கள். கட்டாயமாக சுதந்தரித்துக் கொள்வீர்கள் என்று நான் விசுவாசத்தோடு உங்களுக்காக இந்த வார்த்தைகளை கொண்டு வருகிறேன். நாம் நம்முடைய வழியை வாய்க்கப்பண்ணவே தேவன் விரும்புகிறார். தேவனிடத்தில் வந்தால் சோதனை அப்படி என்று சொல்ல கூடாது. தேவனிடத்தில் வந்தாலே வேதனைதான், சாத்தான் சோதித்து நாம் இல்லாமல் ஆக்கிவிடுகிறான். தேவனிடத்தில் வந்தால் தேவன் நமக்கு விடுதலை தரமுடியாது. பிசாசு நம்மை இல்லாமல் ஆக்கிவிடுவான்போல என்று நீங்கள் நினைக்காதீர்கள்.

உலகத்தில் இருக்கிறவனிலும் உங்களில் இருக்கிற தேவன் பெரியவர் உங்களை எந்த வல்லமையும், எதுவும் ஒன்றும் செய்துவிட முடியாது என்று வேதம் சொல்லுகிறபடி அவரே ராஜாதிராஜா, கர்த்தாதி கர்த்தர், மிகமிக வல்லமையானவர், உலக சூழ்நிலைகளைவிட பிசாசின் கிரியைகளைவிட,

மந்திரங்களைவிட, தந்திரங்களை விட எல்லா தகடுகளைவிட தேவன் வல்லமையுள்ள தேவன் என்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பிசாசு தோற்கடிக்கப்பட்டவன் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். இந்த வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு தேவன் விரும்புகிறார் என்று நாம் இதுவரை பார்த்தோம். தேவன் உங்களுக்கு வெற்றியுள்ள வாழ்வைத்தான் தர விரும்புகிறார் என்று நாம் சிந்தித்தோம். அதை இஸ்ரவேல் ஜனங்களின் வாழ்விலிருந்தும் யோசுவாவுக்கு தேவன் கொடுத்த வார்த்தையிலிருந்தும் தெரிந்து கொண்டோம். நாம் வெற்றியாய் வாழ தேவன் விரும்புகின்றார்.

இவ்விதமாக வெற்றியுள்ள வாழ்வை நாம் எவ்விதமாய் சுதந்தரித்து கொள்ளப்போகிறோம். எப்போது அந்த வெற்றியை அனுபவிக்கப் போகிறோம். அனுபவிக்க முடியும் என்று தொடர்ந்து சிந்திக்கின்ற வசனங்களிலிருந்து, வார்த்தைகளிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ள முடியும். அதற்குரிய ஏழு காரியங்களை நாம் பார்க்கலாம்.

முதலாவது, உண்மையான வாழ்வு தேவனிடத்திலிருந்து வருகிறது என்று உணர வேண்டும். அப்போது நம்முடைய வாழ்வில் எது உண்மையான வாழ்வு என்று தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். உண்மையான வாழ்வு பொய்யான வாழ்வு என்று இரண்டு விஷயங்கள் உள்ளது.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும்போது நான் நல்ல போராட்டத்தை போராடினேன் என்று தன் வாழ்வை குறித்து கூறுகின்றார். இவ்வுலகில் இரண்டு விதமான வாழ்வு இருக்கிறது. நல்ல போராட்டத்தை போராடுகிற வாழ்வு உள்ளது. அல்லது தீய போராட்டத்தை போராடுகிற வாழ்வு இருக்கிறது. இரண்டில் ஒரு வாழ்வுதான் நீங்கள் நடத்த முடியும். இதற்கு நடுவில் ஒரு வாழ்வு கிடையாது. ஒன்று நியாயத்திற்காக போராடி வாழ்கின்ற வாழ்வு. அல்லது பாவத்திற்காக கடந்து போராடி வாழ்வதற்காக மாம்சத்தின் வாழ்வுக்காக போராடி, போராடி உலகத்தில் வாழ்கின்ற வாழ்வு உலகத்தின் சிற்றின்பத்தை அனுபவிக்கிறதற்காக போராட்டம். அதற்கு பலதரப்பட்ட பிரச்சனைகள். அடிதடிகள், இல்லாவிட்டால் இலஞ்சம், ஊழல், இல்லாவிட்டால் திருட்டு. இப்படி ஏதாவது காரியங்களை செய்து தீமையாய் போராடி வாழ்கின்ற வாழ்வு உலக வாழ்வு.

அடுத்ததொரு வாழ்வு இருக்கிறது. நான் தீமைக்காக போராடல, நல்ல போராட்டத்திற்கு நேராக போராடி வாழ்ந்தேன். எந்த விதத்திலும் வாழ்வு என்பது

போராட்டம், அதை தெரிந்துகொண்டால் அவ்வளவுதான். நீங்கள் உலகில் ஒன்று நல்லதுக்காக போராடி வாழலாம். இல்லாவிட்டால் தீயவற்றிற்காக போராடி வாழலாம். இரண்டில் ஒன்று ஏதாவது ஒரு விதத்தில் போராடித்தான் ஆக வேண்டும். இது மாற்ற முடியாத வாழ்வு. எப்படியென்றாலும் நீங்களும், நானும் ஏதோ ஒரு போராட்டத்தை போராடிதான் ஆக வேண்டும்.

ஆகவே, பவுல் சொல்லுகிற வாழ்வு நல்ல போராட்டம், கிறிஸ்துவுக்காய் வாழ்கிறதிலே வருகிற போராட்டங்களை மேற்கொண்டு தேவ உதவியோடு வெற்றிகொண்டு அதில் ஜெயமாய் வாழ்ந்து முடிக்கிற அனுபவம், அதேபோலத்தான் நான் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். இந்த உலகத்தில் உண்மையான வாழ்வு இருக்கிறது, பொய்யான வாழ்வு இருக்கிறது. ஆகவே உண்மையான வாழ்வு எது என்பதை முதலாவது நீங்களும், நானும் கண்டுபிடிக்கவேண்டும். நாம் அநேக வேளைகளில், அவ்விதமாய் உணர்வதும் உண்டு. அதனால்தான் வாழ்க்கை என்பது வெங்காயம் என்று பெரியார் கூறினார். நம் வாழ்க்கையில் ஏதோ இருக்கிறது என்று நினைத்து வெங்காயத்தை உறிப்பதுபோல உறித்துக்கொண்டே இருக்கிறோம். கடைசியில் பார்த்தால் அங்கே ஒன்றுமே இல்லை என்று சொல்கிறார்.

ஆகவே வாழ்க்கை என்பது ஒன்றுமேயில்லை என்று சில நேரங்களில் நாம் உணர்கிறோம். எதற்காக உழகைக்கிறேன், எதற்காக சாப்பிடுகிறேன், இப்படி நான் செய்வதினால் என்ன லாபம் என்று சொல்லி சில வேளைகளில் நாம் யோசிக்கிறோம் இல்லையா? இதையும் தாண்டி ஏதோ ஒன்று இருக்கிறது என்று சொல்லி நாம் உணர்ந்தது உண்டு. அதுதான் உண்மையான வாழ்வுக்கு நேரான திட்டம். இந்த உள்ளம் ஒரு உண்மையான வாழ்வைத் தேடுகிறது. அது உலகத்தில் கிடைக்காது. தேவனிடத்தில் கிடைக்கிறதாக இருக்கிறது. உண்மையான வாழ்விற்கு நான் மூன்று காரியங்களை கூற விரும்புகிறேன்.

மூன்று விதங்களில் நாம் வாழ்வைப் பற்றிய காரியத்தை சிந்திக்க வேண்டும். வாழ்வு என்பது நிறைவானதாய் இருக்கவேண்டும். அது முதலாவது காரியம். உலக வாழ்வில் உங்களால் நிறைவான வாழ்வுபெற முடியவில்லை என்ற விளக்கத்தைக் காட்டினேன். நிறைவான, திருப்தியான வாழ்வை உலக காரியங்களில் பெறமுடியவில்லை. பதவியினால், பணத்தினால், அதிகாரத்தினால், அடிதடியினால், வன்முறையினால், இதில் ஏதோ ஒரு விதத்தினால் நினைப்பதை

சாதித்து விட்டு விடலாம் என்று நினைத்து நடத்திய காரியங்கள் எல்லாவற்றிலும் ஒரு நிறைவான வாழ்வுபெற முடியவில்லை. வாழ்வு வெற்றியானது என்றால் நிறைவான வாழ்வாக இருந்தால்தான் வெற்றியுள்ள வாழ்வு என்று சொல்ல முடியும். உலககாரியத்தில் வெற்றியான வாழ்வு வாழ முடியவில்லை. எவ்வளவோ பெரிய பதவியை வகித்தவர்களெல்லாம் கடைசியில் எவ்வளவு கஷ்டப்பட்டு இறந்தார்கள் என்பதை நாம் அறிந்து இருக்கலாம்.

உலக மாவீரன் நெல்போலியன் மரித்தபோது தன்னுடைய கைகளை வெளியேதான் போடச் சொன்னார், எவ்வளவோ வெற்றி பெற்று விட்டேன், ஆனால் ஒன்றும் கொண்டுபோக முடியவில்லை என்பதைத்தான் அவர் உணர்த்தினார். அவ்வளவுதான். வாழ்க்கை என்பது ஒன்றுமில்லை என்பதைத்தான் நமக்கு உணர்த்துகிறது. நிறைவான வாழ்விற்குப் பெயர்தான் வெற்றியான வாழ்வு. அந்த நிறைவான வாழ்வு எனக்கு உலகில் கிடைக்கவில்லை. உங்களுக்கும் கிடைக்கவில்லை. அப்படியென்றால், நீங்கள் இந்த வாழ்விலே, எப்பொழுது இவ்விதமான ஒரு இடத்துக்கு வருகிறீர்களோ, அதாவது ஒன்றுமில்லைங்க, வாழ்க்கையில் ஒன்றும் இல்லை என்ற இடத்திற்கு நீங்கள் வரும்பொழுது அடுத்து உண்மையான ஒரு இடத்தை தேடுகிற இடத்திற்கு வந்து விட்டீர்கள் என்பதை இப்பொழுது உணரவேண்டும். நிறைய பேர் அந்த இடத்தில் தான் தவறிவிடுகிறார்கள். வாழ்க்கையில் ஒன்றும் இல்லை என்று உணர்கிறவர்கள், வாழ்க்கையில் சில காரியங்கள் இருக்கிறது, ஒரு மெய்யான வாழ்வு இன்னொன்று இருக்கிறது என்பதை சிலர் உணராமல் தன் வாழ்க்கையில் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

வாழ்க்கை என்றால் இதுதான் என்று நினைத்து, கடைசியில் தோற்றுபோனவுடன், வெறுமையை மிக அதிகமாக உணர்ந்தவுடன் இதற்கு பதில் பேசாமல் செத்து தொலையலாம் என்று சொல்லி தற்கொலை செய்துகொள்கிறார்கள். இல்லாவிட்டால் போதைக்கு அடிமையாகி விடுகிறார்கள். ஆனால் சிலர்தான் இந்த வெறுமையை உணருகிற இடத்தில் ஒரு நிறைவொன்று இருக்கிறது என்பதனை உணருகின்றார்கள். தேவன் அவர்களை தேடி வருகிறதை உணருகிறார்கள். அநேகர் இவ்விதமாய் சாட்சி சொல்ல கேட்டு இருக்கின்றோம். இவ்விதமான வெறுமையோடு நான் இருந்தேன், மரிக்கும் தருவாயில் இருந்தேன், தற்கொலை பண்ணும் தருவாயில் இருந்தேன், ஒரு மனிதன் தேவனைப்பற்றி

என்னோடு சொன்னபோது மிக்க மகிழ்ச்சியடைந்தேன். வேத வசனத்தை அவர் வாசித்தார். அது என் வாழ்விலே சமாதானத்தை கொடுத்தது, நம்பிக்கையை கொடுக்கிறது என்றெல்லாம் சொல்லுகிற சாட்சியை நீங்களும், நானும் கேட்டு இருக்கிறோம். தேவன் நம்மை தேடி வருகிறார். இவ்விதமாக நிறைவற்ற வாழ்வு வாழ்கின்ற ஜனங்களை தேவன் தேடி வருகிறதை நீங்கள் பார்க்க முடியும். அவர் அதைத்தான் உணர்த்த விரும்புகிறார். உலகம் மாய்மாலமானது, மாயையானது என்று சொல்லத்தான் கர்த்தர் விரும்புகின்றார். நாம் உலக வாழ்வை வெறுத்து, தம்மை பின்பற்றி வரத்தான் கர்த்தர் விரும்புகிறார்.

உலக வாழ்வை வெறுத்து தம்மைப் பின்பற்றிவரத்தான் கர்த்தர் உங்களை அழைக்கிறார். கிருபையினாலே, விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் என்று எபேசியருக்கு எழுதின நிருபத்தில் பவுல் எழுதுகிறதுபோல, முதலாவது கிருபை உங்களை தேடி வருகிறது. அதற்கு நீங்கள் விசுவாசம் என்கிற பதிலை தரும்பொழுது தேவன் இந்த வெற்றியுள்ள வாழ்வை உங்களுக்கு தருகிற காரியத்தைச் செய்கின்றார். அந்த வாழ்வு வெற்றியான வாழ்வாக மாறப்போகிறது. இரட்சிக்கப்பட்ட வாழ்வோடு கூட, தேவன் என்னையும் உங்களையும் தேடிவந்து நம்முடைய கவனத்தை பிடிப்பதற்காக பல விதங்களில் அவர் செயல்படுகிறார். எதற்காகத் தெரியுமா? ஒரு நிறைவான வாழ்வை தருவதற்காகத்தான். வாழ்வு என்பது நிறைவானதாய் இருக்கவேண்டும். அது ஒரு பார்வையில, வாழ்வின் ஒரு தன்மை என்று கூறலாம். வாழ்வு என்றால் எப்படி இருக்கவேண்டும், நிறைவாய் வாழ்ந்து நிறைவாக நிறைவு செய்கின்ற ஒரு வாழ்வாய் இருக்க வேண்டும்.

நான் ஒரு சில வயதானவர்களிடத்தில் எங்கள் ஊரிலே, கிராமத்தில் இருக்கும்போது, நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். ஒரு தாத்தாவைப் பார்த்தால் ஓடத்தான் நினைப்போம். ஏனென்றால் அவர் வந்தாலே பழைய கதையைச் சொல்லி அறு அறுன்னு, அறுப்பாறு. அவருக்கு காது வேற சரியாக கேட்காது. ஆனால் அவர் தன்னுடைய பழம் பெருமையை சொல்ல ஆரம்பிப்பார். நான் வாலிபனாக இருந்தபோது, இரண்டு மூன்று பேர், ஒரு ஆட்டை பிடித்துக்கொண்டு போவோம், அதுவும் திருடிட்டுத்தான் போவோம். அந்த ஆட்டைத் திருடி எடுத்துட்டு போய்ட்டு அதை வெட்டி, உப்பு அதோடு வத்தல் எல்லாம் அதிலே போட்டு சுட்டு, ஒரு ஆட்டை நாங்க மூன்றுபேரும் சேர்ந்து சாப்பிடுவோம் என்று சொல்லுவார். அது அவருக்கு பெரிய சாதனையாக தெரிந்தது. இப்பொழுது அவர் தன்னுடைய

ஐம்பதாவது (50) வயதிலும் கூட அந்த சாதனையைத்தான் சொல்லிக்கொண்டே இருப்பார். இப்படி சாப்பிடுவோம், அப்படி சாப்பிடுவோம், அப்படி திறமையாயிருப்போம், இப்படி பெரிய சாதனை, பெரிய, பெரிய வெயிட்டையெல்லாம் தூக்கிப்போடுவோம். இதுதான் அவருக்கு பெரிய சாதனையாய் இருந்தததை அவர் சொன்னதை நாங்கள் கேட்டு இருக்கின்றோம்.

பிரியமானவர்களே, அது அவருக்கு நிறைவாய் தோன்றுகின்றது போல் நினைக்கிறார். அதை சொல்லுவார், ஆனால் அநேக வேளைகளில் தன்னுடைய வாழ்வைக் குறித்து கவலைப்பட்டு, ஏதாவது பேசிக்கொண்டு இருப்பார். அப்போது நாம் புரிந்துகொள்ளலாம், அவர் நிறைவாக வாழவில்லை, அவர் சாதனை என்று நினைத்தது உண்மையான சாதனையாக இல்லை. எனவே இந்த இடத்துக்கு இந்த தோல்வியான இடத்திலிருந்து வெளியே கொண்டு வந்து, உங்கள் வாழ்வை நிறைவு செய்யும்போது, உங்களது வயதான காலத்தில் நீங்கள் மரிக்கும் தருவாயில் நல்ல வாழ்வை நான் நடத்தி முடித்தேன். தேவனுக்காக வாழ்ந்தேன், என் பெலனெல்லாாம் தேவனுக்காக செலவழந்தது, என் வாழ்வின் தருணங்களெல்லாம் கர்த்தருக்காக செலவழிந்தது. இப்பொழுது நான் நிம்மதியாக இந்த உலகத்தை விட்டு கடந்து சென்று தேவனிடத்தில் போய் இருக்க போகிறேன் என்று சொல்லுகிற நல்ல வாழ்வை தரவே அந்த வெற்றியுள்ள ஜீவியத்தைத் தரவே தேவன் உங்கள் கவனத்தை பிடிக்க அவர் செயல்படுகிறார். அதற்காக அந்த கிருபை வந்து சந்திக்கிறது. சுவிசேஷம் உங்களை வந்து சந்திக்கிறது. தேவன் உங்களை சந்தித்தபோது, அதற்கு சரியான பதிலை கொடுக்கும்போது, நீங்கள் இரட்சிக்கப்படுகிறீர்கள். வெற்றியின் வித்து அப்பொழுதே போடப்படுகிறது.

அடுத்து வாழ்வென்றால் அது எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டதாய் இருக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்டதாய் இருக்க வேண்டும் என்று நாம் சற்று சிந்திக்க இருக்கின்றோம். நாம் சற்று முன்னர் ஒரு நிறைவான வாழ்வுதான் நம்முடைய வாழ்விலே திருப்தியை தருகிறதாய் இருக்கிறது என்று பார்த்தோம்.

வாழ்விலே திருப்தி அடைகிற வாழ்வு பரிபூரணமான வாழ்வு என்றெல்லாம் நாம் பார்த்தோம். நாம் உலகிலே எத்தனையோ காரியங்களை சம்பாதித்தாலும், பெற்றாலும் அதிலே ஒரு நிறைவை பெற முடியவில்லை. ஆனால் தேவனிடத்திலே ஒரு நிறைவான வாழ்வை, திருப்தியான வாழ்வை பெற்றுக்கொள்ளுகிறோம். அதுதான் உண்மையான வாழ்வு என்று நாம் சற்று முன்னர் சிந்தித்தோம்.

ஆம் பிரியமானவர்களே, வெற்றியுள்ள வாழ்வு என்றால் இதுதான் என்று ஒரு மூன்று காரியத்தை கூறிக்கொண்டு இருக்கிறேன். அதில் முதலாவது காரியத்தை நாம் சிந்தித்து விட்டோம். திருப்தியான வாழ்வு, நிறைவான வாழ்வு வாழ்வதுதான் வெற்றியான வாழ்வு.

அடுத்து நாம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழ்வு வாழ்கிறதற்கு வாழ்கிறவர்களாய் காணப்பட வேண்டும். சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட இடத்தில் வாழவேண்டும், அதுதான் வெற்றியான வாழ்வு என்பதை நாம் புரிந்து இருக்கிறோம். ஒருவேளை சமுதாயத்திலே நாம் எந்த அளவுக்கு அங்கீகரிக்கப்படுகிறோம் என்பதை நீங்கள் உங்கள் வாழ்விலே பார்க்க முடியும். சமுதாயம் ஒரு குறிப்பிட்ட சிலரை குறிப்பிட்ட நபர்களை மாத்திரமே அங்கீகரிக்கிறதாய் இருக்கிறது. ஒருவேளை பணக்காரர்கள், தாலந்து படைத்தவர்கள், மிகவும் செயற்கரிய செயல்களை செய்தவர்கள், இல்லாவிட்டால் அவர்களிடத்தில் சேர்ந்தால் ஏதாவது காரியம் நடக்கும் என்று சொல்லுகிற இடத்திலே இருக்கிறவர்களோடு மக்கள் சேருகிறார்கள். அவர்களை அங்கீகரிக்கிறார்கள். அப்பொழுது அந்த அங்கீகரிப்பு உலக பிரகாரமாய் சமுதாயத்தில் மக்களுக்கு கொடுக்கப்படுகிறதாய் இருக்கிறது. படிப்பின் அடிப்படையிலே, வசதியின் அடிப்படையிலே, சூழ்நிலைகளின் அடிப்படையிலே அவர்களுடைய அதிகாரத்தின் அடிப்படையிலே, அமைகிறதாய் இருக்கிறது. ஆனால் இவ்விதமாய் அங்கீகரிக்கப்படுகிற ஒரு வாழ்வு நிறைவான வாழ்வு அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அது நம்முடைய வாழ்வின் முக்கிய நோக்கம் அல்ல. ஏனெனில் இவ்விதமாய் ஏற்றக்கொள்ளப்பட்டவர்கள், ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். பிறகு அவர்கள் வாழ்விலே தோல்வி ஏற்பட்டால் அவர்கள் வாழ்வில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால், அவர்கள் கீழே தள்ளப்படுகிறதை நாம் பார்க்க முடிகிறது. இது உலக நிலை. ஆனால் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வாழ்வை நீங்களும், நானும் வாழ்கிறதுதான், ஒரு வெற்றியுள்ள வாழ்வின் எல்லை, குறிக்கோள் என்று நான் சொல்ல விரும்புகின்றேன்.

பிரியமானவர்களே, நீங்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இடத்திலே வாழவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாய் கூறுகின்றார். 2 கொரிந்தியர் 5:18-19 வசனங்களை நாம் வாசிக்கும்போது, “இவையெல்லாம்

தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.'' இது என்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களை தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார் என்று பார்த்தோம். தேவன் என்ன செய்தார், இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மை அவரோடே ஒப்புரவாக்கிவிட்டார். நம்மை அவர் ஏற்றுக்கொண்டார் என்பதுதான் அதனுடைய அர்த்தம். நாம் முன்னே அவரால் ஏற்றுக்கொள்ளப்படாத, ஏற்றுக்கொள்ள முடியாத இடத்தில் இருந்தோம். பாவிகளாய் இருந்தோம், ஆனால் கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்தபடியால் கிறிஸ்துவுக்குள் நம்மை அவர் ஏற்றுக்கொண்டார். ஒவ்வுரவாக்கிக் கொண்டார் என்று இங்கு பார்க்கிறோம்.

பிரியமானவர்களே, தேவன் உங்களை ஏற்றுக் கொண்டார், என்னை ஏற்றுக் கொண்டார். சிலுவையினாலே இயேசு உங்களுக்காக மரித்து, எனக்காக மரித்து, உயிர்த்தெழுந்தபடியினால் நாம் அவரால் ஏற்றுக்கொள்ளப்படுகிற இடத்திற்கு வந்து விட்டோம். முன்னே நாம் தூரமாயிருந்தோம். முன்னே நாம் அவருடைய ஆசீர்வாதங்களுக்கு தூரமாயிருந்தோம், முன்னே புறஜாதியாய் கருதப்பட்டோம். அவருடைய வாக்குத்தத்தங்களுக்கு, ஆசீர்வாதங்களுக்கு, அவருடைய உடன்படிக்கைகளுக்கெல்லாம், தூரமாயிருந்தோம் என்று வேதத்திலே பார்க்கிறோம். ஆனால் இப்பொழுதோ, கிறிஸ்துவுக்குள் நம்மை அவரோடு ஒப்புரவாக்கி விட்டார். அதாவது அவர் நம்மை ஏற்றுக் கொண்டார். ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழ்வு.

உலகம் நம்மை ஏற்றுக்கொண்டு வாழாது, அங்கீகரிக்காது, சரியான இடத்தில் வைக்காது, ஆனால் தேவனோ உங்களையும், என்னையும் ஏற்றுக்கொண்டு அங்கீகரித்து இந்த உலகில் வாழ வைக்கின்றார். அந்த அங்கீகரிக்கப்பட்ட வாழ்வுதான், வாழ்க்கையில் வெற்றியுள்ள வாழ்வு. உலகிலே மனிதர்கள் அந்த அங்கீகரிப்பை பெறுவதற்குதானே போராடிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தவறான இடத்தில் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். மனிதனால் அங்கீகரிக்கப்படுகிறதை விரும்புகிறார்கள். தாங்கள்

வரும்போது எல்லோரும் எழுந்திருக்க விரும்புகிறார்கள், தான் வருகிறது தனியாக தெரியவேண்டும் என்று விரும்புகிறார்கள். சமுதாயத்தில் தனக்கென்று தனிபெயர் இருக்கிறது. அங்கீகரிக்கப்படுகிற இடத்தில் இருக்கிறோம் என்று சொல்லப்படுகிறதை மனிதர்கள் விரும்புகிறார்கள். ஆனால் இந்த அங்கீகாரம் சரியான ஒரு அங்கீகாரம் அல்ல. அது மாயையான அங்கீகாரம். அது அழிந்து போகக்கூடியது. தேவன் உங்களை அங்கீகரிக்கிறார், நீங்கள் ஏழையாக இருந்தாலும், பணக்காரனாயிருந்தாலும், படித்தவர்களாயிருந்தாலும், படிக்காதவர்களாயிருந்தாலும், உங்களையும், என்னையும் அவர் தம்முடைய சிலுவையின் மூலமாக அங்கீகரித்து அவர் இரட்சித்து வழிநடத்துகிறார். அங்கீகரித்து வழிநடத்துகிறார்.

தம்முடைய பிள்ளையாக அங்கீகரித்து பாவி என்ற நிலையிலிருந்து வெளியே கொண்டு வந்து, நீதிமான் என்ற நிலையிலே உங்களையும், என்னையும் வாழவைக்கிற தெய்வம் நம்முடைய தேவன். இந்த அங்கீகரிப்பை பெற்றுக்கொண்ட வாழ்வை பெறுவதுதான் வாழ்க்கையின் முக்கிய நோக்கம். நாம் அதை பெறமுடியும் என்று வேதம் சொல்லுகிறது. தேவனுக்குள்ளாக நாம் பெறமுடியும். தேவன் அந்த ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைத்தான் இந்த புதிய ஏற்பாட்டின் காலத்திலே தந்திருக்கிறார். நீங்கள் பாவிகளாய் இருந்தபோது அவர் உங்களை கடிந்துகொள்ளவில்லை. உங்கள் மீது கோபம் கொள்ளவில்லை.

நீங்கள் அவரிடத்தில் வந்தபோது அவர் உங்களை கடிந்துகொண்டு, ஒருவேளை பயங்காட்டி, திட்டி அனுப்பவில்லை. அந்த தகப்பன் நாம் பார்க்கிறோம், இளைய குமாரன் கதையிலே. அந்த தகப்பன் எவ்வளவு தூரம் கடிந்து கொள்ளாதவராய், மனதுருக்கத்தோடு ஓடிவந்து பாவத்திலிருந்து திரும்பி வந்த அந்த மகனை எவ்வளவாய் ஓடிச் சென்று அவனைக் காணச்சென்றார் என்று பார்க்கிறோம். அதுதான் தேவனுடைய அன்பு, பிதாவின் அன்பு. கடிந்துகொள்ளாமல் நம்மை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளுகிற அன்பு. ஆகவே வாழ்க்கை என்றால், இதுதான் வாழ்க்கை. உலக மனிதன் அங்கீகரிப்பது பெரிய விஷயம் அல்ல. இந்த உலகத்தை படைத்த கர்த்தர் உங்களை அங்கீகரித்து வாழ வைக்க விரும்புகிறார் என்னதொரு மாபெரும் பாக்கியம் என்று பாருங்கள். உங்களுக்கும் எனக்கும் இது கிடைத்து இருக்கிறது. அநேகருக்கு இது கிடைக்கவில்லை. அநேகர் இதை முக்கியப்படுத்தவில்லை. தேவன் நம்மை

அங்கீகரிப்பாரென்று அவர்கள் ஒருபோதும் நினைத்துகூட பார்க்கவில்லை. ஆனால் இந்த இடத்துக்கு நீங்கள் வரபோகிறதாகப் வேதாகமத்தில் படித்துக்கொண்டிருக்கிறீர்கள். பிரியமானவர்களே நம் தேவன் நம்மை அங்கீகரித்து இருக்கிறார்.

மூன்றாவது காரியம், வாழ்வின் அர்த்தம். வாழ்வின் அர்த்தம் என்ன? வாழ்விலே ஒரு நோக்கத்தை கண்டுபிடிப்பது, வாழ்விலே நோக்கத்தை கண்டுபிடிப்பதுதான் வாழ்வின் அர்த்தம். எனவே உங்கள் வாழ்க்கையில் எதற்காக வாழ்கிறீர்கள் என்பதை கண்டுபிடித்து, அதை அறிந்து கொண்டீர்களானால், வெற்றியுள்ள வாழ்வை நீங்கள் அடைந்து விட்டீர்கள், அடையப் போகிறீர்கள் என்பதை நீங்கள் உறுதி பண்ணிக்கொள்ளலாம். உலகிலே மனிதன் பல விதங்களில் முயற்சி செய்கிறான். தான் ஏன் உலகில் வாழ்கிறேன் என்பதை கண்டுபிடிக்க வேண்டும் என்று பல விதங்களில் முயற்சி பண்ணுகிறான். அதற்காக அதிகாரத்தை நாடிப் பார்க்கிறான். செல்வத்தை தேடிப் பார்க்கிறான். எல்லாவற்றையும் அனுபவித்து பார்க்கிறான். ஆனால் ஒன்றில் கூட ஒரு நோக்கம் இல்லாதவனாக உணருகிறான். எதையெல்லாமோ அனுபவித்து பார்த்து விட்டு, சாலொமோன் ஞானியைப் போல சொல்கிறான், மாயை, எல்லாமே மாயை என்று.

உலகிலே எத்தனையோ பணக்காரர்கள் வந்து, போய்விட்டார்கள். என்னவெல்லாமோ அனுபவித்து பார்த்து விட்ட மனிதர்கள் கடந்துபோய் விட்டார்கள். ஆனாலும், அவர்கள் கடைசியிலே உணர்ந்தது எல்லாம் வெறுமைதான். வாழ்வின் நோக்கத்தை அறியாமலே அவர்கள் கடந்து போய் விட்டார்கள். ஆக எல்லாவற்றையும் வெறுமையை கண்ட மனிதன் வாழ்வை வெறுத்து வாழ்ந்து முடித்து இருக்கிறான். வாழ்க்கையில் ஏதோ ஒரு பெரிய அர்த்தம் இல்லை என்பதை நாம் காணாத பொழுது எப்படி இருப்போம் என்று தெரியுமா? ஏதோ வாழ்கிறோம் என்கிற இடத்துக்கு வந்து இருக்கிறோம். ஆனால் ஏதோ இருக்கிறது என்பதை நீங்கள் உணரும்போது, வாழ்வில் ஒரு நோக்கம் இருக்கும்போது அதுவே உங்களை வழிநடத்தி செல்கிற மாபெரும் சக்தியாயிருக்கிறது. ஏதோ ஒன்றை நாம் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை பெற்றவர்களாய் வாழும்பொழுதுதான் ஒரு நோக்கம் இருக்கிறது என்று உணர்ந்து வாழும்போதுதான், நாம் சாதிக்கின்ற ஒரு இடத்திற்கு போவோம், மட்டுமல்ல அதற்கு நேராக நம்மை நடத்துகிற சக்தி செயல்படுகிறதை நாம், பார்க்க முடியும்.

அதுதான் நம்மை இயக்குகிற சக்தி என்று நான் சொல்லுகிறேன். அது நம்மை இயக்குகிறது, நடத்தி செல்கிறது, ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை அடைவதற்கு நேராய் நடத்தி செல்கிறது. வாழ்வின் நோக்கம் தெரிந்துகொள்ள வேண்டும். ‘‘நோக்கத்தை கண்டறிவது’’ என்பது ஒன்றுதான் வாழ்வின் முக்கிய நோக்கம் போல காணப்படுகிறத. ஒருவேளை பல கோட்பாடுகளை நீங்கள் பார்த்திருக்கலாம். தத்துவ மேதைகளின் கருத்துக்களை பார்த்திருக்கலாம். அதன் வழி வாழ்ந்தும் பார்த்திருக்கலாம். ஆனால் எல்லா விதத்திலும் தோல்வி கண்டுதான் பார்த்திருப்பீர்கள். அவர்கள் எத்தனையோ காரியங்கள் விளக்கமாக கூறி இருக்கிறார்கள். ஆனால் அது நடைமுறை வாழ்விற்கு ஒத்து வராது என்பதை நீங்கள் வாழ்ந்து பார்க்கும்போது கண்டு கொள்ள முடியும். ஒரு அருமையான ஆசிரியர் இவ்விதமாய் கூறுகிறார், நாம் இந்த உலகிலே இருப்பதற்கு ஒரு நோக்கம் இருக்கிறது. அதை வேறு யாரும் நமக்கு சொல்லி தந்துவிட முடியாது. நீங்கள் கர்த்தரிடத்தில் மாத்திரமே கண்டுகொள்ள முடியும் என்று தெரிவிக்கிறார்.

ஆம் பிரியமானவர்களே, இந்த உலக வாழ்வின் நோக்கத்தை வேறே எதிலும் கண்டுகொள்ள முடியாது. அதை காணவிளைந்த சாலொமோன் ஞானி, இறுதியில் சொல்கிறார், எல்லாம் மாயை, மாயை, மாயை. உலகத்திற்காய் வாழ்ந்து பார்த்தாச்சு. எல்லாம் அனுபவித்தும் பார்த்தாயிற்று. ஆனால் மாயை என்றே சற்று சிந்திக்க வருகிறது என்று சொல்கிறீர்கள். தேவனிடத்தில்தான் அந்த வாழ்வின் நோக்கத்தை கண்டுபிடிக்க முடியும். ஏன் உலகத்தில் இருக்கிறோம்? எதற்காக வாழ்ந்துகொண்டு இருக்கிறோம்? எங்கு நோக்கி நாம் பயணம் சென்றுகொண்டு இருக்கிறோம்? நாம் உலகில் வாழும் நாட்களில், இனி என்ன செய்ய வேண்டும்? தேவனுக்கு பிரியமானதை நடப்பித்து நாம் வாழ்ந்தால், மகிழ்ச்சியாக இருக்கும் என்று வேதம் சொல்கிறது. அது உண்மைதான் என்று வாழ்ந்து பார்க்கும்போது நிச்சயமாக உங்கள் வாழ்க்கையில் நோக்கத்தை கண்டுபிடிக்க முடியும்.

இயேசு கிறிஸ்து வேதத்தில் இப்படித்தான் சொல்லி இருக்கிறார். நானே வழியாய் இருக்கின்றேன். நீங்கள் என்னை பின்பற்றி வரும்போது, நான் உங்களுக்கு சொன்னவைகளை செய்யும்போதும், உங்கள் வாழ்வு மாற்றம் பெறும் என்ற அர்த்தத்திலே தான் இயேசு வேதத்திலே நமக்கு வசனங்களை தந்திருக்கின்றார். அவ்விதமாய் நாம் தேவனுடைய வார்த்தையை கேட்டு அந்த வாசல் வழியாய், அவருடைய வழியில் செல்லும்போது ஒரு ஆச்சரியமான வாழ்வு

பெறுகிறோம். கிறிஸ்துவுக்காக முதல் அடியை எடுத்து வைத்து முன்னே செல்லும்போது ஒரு ஆச்சரியமான வாழ்வு, மகிழ்வான வாழ்வு காத்திருக்கிறது. உங்கள் வாழ்வில் அதை அனுபவிக்கிறதை உங்களால் காண முடியும். பிரியமானவர்களே வாழ்வினுடைய நோக்கத்தை தேவனே தருகின்றார். நீங்கள் உலகில் இதுவரை தேடினது போதும். உலகிலே ஏதோ இருக்கிறது என்று வாழ்ந்தது போதும். இன்றைக்கு கிறிஸ்தவர்கள் செய்கிற தப்பு அதுதான். உலகத்திலே ஏதோ ஒன்று இருக்கிறது என்று நினைத்து, உலக வாழ்வை சிறப்புற வாழ கர்த்தாவே ஆசீர்வதியும் என்று ஜெபிக்கிற தவறான இடத்துக்கு போய்விட்டார்கள். கிறிஸ்துவோடு, கிறிஸ்துவுக்குள்ளாக, கிறிஸ்து விரும்புகிற வழியிலே வாழ்கிற வாழ்வு ஒரு நோக்கமுள்ள வாழ்வு. ஆனால் மனிதர்கள் தாங்களாகவே ஒரு இலக்கை நிர்ணயித்து விட்டார்கள். அவர்களே ஒரு நோக்கத்தை உருவாக்கி விட்டார்கள். ஆண்டவரே இவ்விதமாய் இந்த தொழில் செய்ய போகிறேன். இந்த தொழிலில் நான் இப்படிப்பட்ட ஒரு இடத்துக்கு வரவேண்டும். இந்த குறிக்கோளை அடைய எனக்கு உதவி செய்ய வேண்டும். நீங்க செய்தீங்க என்று நாம் சாட்சி சொல்ல வேண்டும், சொல்லுவேன். அப்படி நீங்கள் எனக்குச் செய்யும்போது, நான் இவ்விதமாய் காணிக்கை செலுத்துவேன். ஆலயத்தைக் கட்டித் தருவேன் என்று ஏதோ ஒரு பொருத்தனையை பண்ணுகிறார்கள். ஆனால் என்ன தப்பு செய்கிறார்கள்? அவர்களுக்கு ஒரு நோக்கத்தை அவர்களாகவே திட்டம் பண்ணிவிடுகிறார்கள். அதை நிறைவேற்றுவதற்கு தேவ உதவியை நாடுகிற இடத்துக்கு கிறிஸ்தவம் இன்றைக்கு போய்க்கொண்டிருக்கிறது.

ஆனால் உண்மையில் தேவனுடைய நோக்கத்தை கண்டுபிடிக்க வேண்டும். தேவனிலே உங்க வாழ்க்கையை குறித்த நோக்கத்தை கண்டுபிடித்து அது வழியாய் போகவேண்டும். பவுல் இவ்விதமாய் சொல்கிறார், பிலிப்பியர் 3:12-13 வசனங்களை நாம் வாசிக்கின்றபோது, ‘‘நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி,’’ தொடர்கிறேன் என்ற அர்த்தத்திலே சொல்கின்றார்.

பிரியமானவர்களே, கிறிஸ்து ஏதோ ஒரு நோக்கத்திற்காக பிடித்து இருக்கிறார் என்பதை பவுல் எழுதுகிறார். நான் எதற்காக பிடிக்கப்பட்டேனோ, தேவன் நம்மை பிடித்திருக்கிறார் என்று அர்த்தமாகிறது. நீங்கள் பிடித்தால் விட்டு விடுவீர்கள். ஆனால் தேவன் உங்களை பிடித்து இருக்கிறார். இதோ ஒரு விதத்தில் சொல்ல வேண்டுமென்றால், தேவன் எங்கேயோ ஓடிக்கொண்டிருந்த உங்களை பிடித்து வைத்திருக்கிறார். சின்னக் குழந்தைகள் ஓடி விளையாடும்போது பிடித்து வைக்கிறது போல. தேவன் நம்மையும் பிடித்து வைத்துள்ளார். நம் விருப்பத்தின்படி போகாமல், தேவன் பிடிக்குள் நாம் வந்து விட்டோம். அதனால் எதற்காக பிடிக்கப்பட்டேனோ, அதை நான் பிடிக்கும்படி ஆசையாய் தொடர்கிறேன். எந்த நோக்கத்திற்காக தேவன் என்னை அழைத்தாரோ, அந்த நோக்கத்தின்படி வாழ நான் ஆசையாய் தொடர்கிறேன். இதுதான் நோக்கம்.

நோக்கத்தைக் கண்டிபிடிப்பது. தேவனுக்காக வாழ்கிற வாழ்க்கையில் நோக்கத்தை கண்டுபிடிப்பது, எதற்காக ஆண்டவரே என்னைப் பிடித்தீர்? நான் எங்கோ, எதற்கோ போய்க்கொண்டிருந்தேன். முன்பு என் விருப்பத்தின்படி மாம்சமும், மனதும் விரும்புகிறதைச் செய்தேன். உலகில் பெரிய வேலை வாங்கவேண்டும், சம்பளம் வாங்க வேண்டும் என்று போய்க்கொண்டிருந்தேன், சமுதாயம் இப்போது என்னை மதிக்க மறுக்கிறது. நான் நல்ல பணக்காரன் ஆகி எல்லோருடைய மதிப்பையும் பெறவேண்டும். அப்படியெல்லாம் நான் நினைத்தேன், எங்கேயோ, எதனாலயோ பிடிக்கப்பட்டிருந்தேன். ஆனால் நீங்க என்னைப் பிடித்துக்கொணடீர்கள். இதுல ஒரு நோக்கம் இருக்கிறது, இதை நான் பிடித்துக்கொண்டு ஓட வேண்டும். அதுலதான், அந்த நோக்கத்தை நான் கண்டுபிடித்து வாழவேண்டும். நான் எங்க வாழவேண்டும், என்ன செய்ய வேண்டும் என்று நீங்க நினைக்கிறீர்களோ, அதை நான் செய்ய வேண்டும். அதையே நான் பிடித்துக்கொள்ளும்படி உதவி செய்யவேண்டும். பவுலைப்போல நீங்களும், நானும் ஆசையாய் தொடர்வோமா? அதற்கு நேராய் ஓடுகிறதுதான் வெற்றியுள்ள வாழ்வு. வாழ்வுல தேவனுடைய நோக்கத்தை கண்டுபிடிப்பதில்தான் வெற்றி உள்ளது.

நோக்கம் பெற்ற வாழ்வு வாழ்கிற அநேக கிறிஸ்தவர்கள், வெந்ததை தின்போம், விதி வந்தால் மாளுவோம், மற்றவர்கள் சொல்கிறார்கள் என்கிறது

போலவே, இன்று தேவ பிள்ளைகள் வாழ்கிறார்கள். மூன்று காரியங்களை நான் கூறினேன்.

1. ஒரு திருப்தியான வாழ்வை வாழ்கிறது வெற்றியுள்ள வாழ்வு.
2. அங்கீகரிக்கப்பட்ட வாழ்வை நடத்துவது வெற்றியுள்ள வாழ்வு.
3. நோக்கத்தை அறிந்துகொண்டு வாழ்கிற வாழ்வு வெற்றியுள்ள வாழ்வு

என்று எல்லா விளக்கத்தையும் நாம் படித்தோம். இவற்றையெல்லாம் புரிந்துகொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். வாழ்க்கைன்னா, இதுதான் வாழ்க்கை. கோடீஸ்வரனாக, இலட்சாதிபதியாக, மற்றவர்களை ஏமாற்றி சொத்துக்களை ஒருவேளை சேர்த்து, சமுதாயத்தில் அதனால ஒரு இடத்தைப் பெற்று, அதனால் உயர்ந்த இடத்துக்கு வந்து வாழ்கிறதுக்கு பேரு வெற்றியுள்ள வாழ்க்கை என்று சொல்ல முடியாது. அடுத்து வெற்றியுள்ள வாழ்வின் இரண்டாம் படிக்கு செல்கின்றோம்.

முதலாவது படி, வாழ்வின் முக்கியமான நோக்கங்களை கண்டறியுங்கள். அந்தபடியில் மூன்று காரியங்களைப் பார்த்தோம். எது மெய்யான வாழ்வு என்று மூன்று காரியங்களைக் கொண்டு விளக்கக் கேட்டோம்.

- ❖ திருப்தியான வாழ்வு
- ❖ அங்கீகரிக்கப்பட்ட வாழ்வு
- ❖ நோக்கமுடைய வாழ்வு

வாழ்வின் முக்கிய நோக்கங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவது காரியம், தேவனுக்கு கீழ்ப்டிந்து வாழ்வதை தேர்ந்தெடுத்து வாழுங்கள். தேவனுக்கு கீழ்படிந்து வாழ்வதை நாமதான் தெரிந்தெடுத்து வாழவேண்டும். தேவன் நமக்கு சுய சித்தத்தை தந்திருக்கிறார் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அதனால்தான் ஆதாம், ஏவாள் வாழ்க்கையில் ஆரம்பித்து இன்றுவரை தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே இப்படிப்பட்ட உறவு காணப்படுகிறது. தேவன் உங்களை தேடிவர வேண்டியதாயிருக்கிறது. நீங்கள் உங்கள் இஷ்டப்படி போகிற இடத்துல இருக்கிறீர்கள். ஏனெனில் நாம் ரோபோ மாதிரி படைக்கப்படவில்லை. அவர் சொன்னால் சொன்னதுதான், அப்படியே செய்கிற இடத்திலே இருக்க வேண்டும். அவரால நம்மை வாழ வைக்க முடியும். ஆனால் அப்படி நம்மை வைக்கவில்லை.

சுயசித்தம் என்று ஒன்றை நமக்கு தந்தபடியினால் நாம் நல்லதை வேண்டுமானால் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தீமையானதை தேர்ந்தெடுத்து வாழலாம். அதற்கு உரிமை இருக்கிறது. அதை அவர் தடுக்க மாட்டார். ஆனால் அவர் சொல்லுவார், நீ இந்த தீய வழியை விட்டு வா என்று அழைப்பார். ‘‘மகனே அது தீய வழியில் உன்னை நடத்தும், உனக்கு இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் நடக்கும்’’ என்று எச்சரிப்பார். அதெல்லாம் செய்வார். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் இதற்குமேல நீங்கதான் முடிவு செய்ய வேண்டும். நான் எந்த வாழ்க்கையை தேர்ந்தெடுத்து வாழவேண்டும். தேவனுக்கு கீழ்படிகிற வாழ்வு நடத்தவேண்டுமா, தேவனுக்கு கீழ்ப்படியாத வாழ்வு நடத்தவேண்டுமா என்பதை நீங்களும், நானும் சுயமாக முடிவெடுக்கிற ஒரு விஷயம். தேவன் அவ்விதமாக நமக்கு ஒரு சுய சித்தத்தை தந்திருக்கிறார். நாம் நம்முடைய இஷ்டப்படி வாழ நினைக்கும்போது, நாம் தேவனுடைய ஐக்கியத்தை இழந்துவிடுவோம். தேவனோடு இருக்கிற நெருக்கத்தை இழந்துவிடுவோம். நமக்கும், அவருக்கும் இடையே மிகப்பெரிய பிளவு ஏற்படுகிற இடத்தில் வாழ்வோம். இப்படி வாழ்கிறதினால், என்ன ஆகும். தேவனுக்கு அடிமையாக இருக்கிற நாம், பாவத்துக்கு அடிமையாக இருக்கிற இடத்திற்கு போய்விடுவோம். ஆனால் எங்கோ ஒரு இடத்துக்கு அடிமையாக போகிறது உறுதி. ஒன்று தேவனுக்கு அடிமையாக இருந்து, சுதந்திரமான, சுயாதீனமான வாழ்வை வாழபோகிறேன். அந்த மகிழ்ச்சியான வாழ்வை வாழபோகிறேன். அதை விட்டுவிட்டால், பாவத்துக்கு அடிமைப்பட்டு மிகவும் சிரமப்பட்டு நிம்மதி இழந்து, நாம நினைக்கிற பாவத்தைச் செய்தால் மகிழ்ச்சி இருக்கும் என்று நினைக்கிறோம். நினைக்கிறது தப்பா? ஆனால் பாவம் செய்ய ஆரம்பித்ததும் நிம்மதி போகிறது, மன நிம்மதியும் போய்விடுகிறது.

நம்மில் குற்ற உணர்வு வருகிறது, நாம் ரொம்ப கஷ்டப்படுகிறோம். இந்த குற்ற உணர்வுள்ள வாழ்வு நம்மை அடிமைத்தனத்தின் வாழ்வுக்கு நேராக கொண்டு போய்விடும் என்பதனை நாம் நன்கு அறிந்துகொள்ள வேண்டும்.

நாம் வெற்றியுள்ள ஆவிக்குரிய ஜீவியம் செய்ய தேவனுக்கு கீழ்படிந்து வாழ்கின்ற வாழ்வை தெரிந்தெடுக்க வேண்டும். தேவனுக்கு எப்படி கீழ்படிந்து வாழ்வது?

முதலாவது, நாம் நம்முடைய நிலையை நன்றாக தெரிந்துகொள்ள வேண்டும். நாம் நீதிமான்கள் இல்லை. நாம் எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாக போனோம் என்று ரோமர் 3:23 சொல்கிறது. ஏசாயா 64:6ல் நம்முடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தையைப்போல இருக்கின்றது. நாம் அனைவரும் தீட்டானவர்கள்போல் இருக்கின்றோம். நாம் நம்முடைய சுயநீதியை உடையவர்களாக, அதனடிப்படையில் செய்கின்ற செயல்களையெல்லாம் நல்லது என்று நினைக்கிறோம். நாம் நம்முடைய சுயநீதியின் கிரியைகளை மேன்மைப்படுத்துவதே தேவனுக்கு கீழ்படியாததற்கு சமமானதாக காணப்படுகிறது. நம்முடைய சுயநீதி ஒன்றுக்கும் உதவாது என்பதனை நாம் முதலாவது தெரிந்துகொள்ள வேண்டும். இரண்டாவதாக நாம் தேவனுடைய காரியங்களுக்கும், நீதிக்கும் கீழ்படிய முடியாத இடத்திலே இருக்கின்றோம் என்பதனையும் அறிய வேண்டும்.

ஆதாம் ஏவாளின் வீழ்ச்சியினால் மனித இனம் தேவனுக்கு விரோதமாக கலகம்பண்ணின இடத்தில் இருக்கின்றது. ஆதாம் ஏவாளின் வீழ்ச்சியினால் அவர்களுடைய பாவமான சுபாவம் நம்மனைவருக்குள்ளும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. அவர்கள் கீழ்படியாமை என்ற பாவத்தை செய்தபடியினால் நீங்களும், நானும் கீழ்படிய முடியாதவர்களாகிப்போனோம். இதுதான் நம்முடைய சுபாவம் (Nature).

நம்முடைய மூதாதையாருடைய கீழ்படியாமையினால் நாமும் கீழ்படியாமை என்ற பாவத்தில் இருக்கின்றோம். நாம் ஏன் தேவனுக்கு கீழ்படியாத இடத்தில் இருக்கின்றோம் என்பது இப்பொழுது நமக்கு நன்கு தெரிகிறதல்லவா.

முதலாவது நாம் நம்முடைய வாழ்வில் இப்பொழுது எந்த இடத்தில் இருக்கின்றோம் என்று தெரிந்துகொண்டாலே அடுத்து எங்கே போகவேண்டும் என்பது நமக்கு தெரியவரும். நம்மில் அநேகருக்கு நாம் எங்கே இருக்கின்றோம்? என்பதும் என்ன செய்து கொண்டிருக்கின்றோம்? என்பதும் தெரியாமலேயே, ஏதோ வாழ்கிறோம், ஏதோ தேவனை தொழுதுகொள்கிறோம், ஏதோ ஆராதிக்கின்றோம், சும்மா அப்படியே வருகிறோம், போகின்றோம் என்று ஆகிப் போய்விட்டோம் என்பது வருத்தமான விஷயம்.

தேவன் பாவம் செய்தவர்களை தண்டிக்கிறவர் என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தப்பு பண்ணினால் பெற்றோர்கள் தண்டிக்கிறார்கள்,

மற்றவர்களும் தண்டிக்கிறார்கள். இதைப்போலத்தான் கீழ்படியாத நம்மையும் தேவன் தண்டிக்க போகிறார் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். பாவி என்ற நிலையிலிருந்து வெளியில் வந்தால் தேவனுடைய தண்டனைக்கு தப்ப முடியும் என்பதை இப்பொழுது புரிந்துகொண்டிருக்கின்றோம். நாமும் பாவத்திலிருந்து வெளியே வர முயற்சிக்கின்றோம். நாம் அனைவரும் கீழ்ப்படியாமை என்பதிலிருந்து வெளியே வரவேண்டும் என்றுதான் தேவனும் விரும்புகின்றார். வெற்றியுள்ள வாழ்வுக்கு இதுதான் வழி. முன்பு கீழ்படியாமல் இருந்தோம். இப்பொழுது கீழ்படிதல் என்ற இடத்திற்கு வந்திருக்கின்றோம். தேவனுக்கு கீழ்படியவேண்டும் என்பதனை தெரிந்துகொண்டதினாலே இந்த இடத்திற்கு வந்திருக்கின்றோம். முதலாம் ஆதாம் கீழ்ப்படியாமைக்கு அடையாளமாய் இருக்கின்றான். அவனது கீழ்படியாமையினாலே தேவனுக்கு கீழ்படியாத ஒரு சந்ததி போய்க்கொண்டே இருக்கின்றது. அது கீழ்படியாமையின் சந்ததி. ஆனால் இரண்டாம் ஆதாமாகிய இயேசு தேவனுக்கு கீழ்படிகிறவராக வந்தார். தேவனுடைய வசனத்திற்கு கீழ்படிகிறவராக வந்தார். மரணபரியந்தமும் தம்மை கீழ்படித்தினார். தேவனுக்கு அவர் அவ்விதமாக தம்மை கீழ்படிததினதினாலே அவருக்கு எல்லாவற்றிற்கும் மேலான நாமத்தை தேவன் கொடுத்தார்.

இரண்டாம் ஆதாமாகிய இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள், கீழ்படிதலுள்ள சந்ததி ஆவர். நாம் நம்முடைய மூதாதையருடைய கீழ்படியாமையினாலே பாவத்திற்கு உட்படுத்தப்பட்டு தேவனுடைய மகிமையை இழந்தவர்களாக காணப்பட்டாலும் பிந்தின ஆதாமாகிய இயேசுகிறிஸ்து தேவனுக்கு கீழ்படிந்ததினாலே, அவருடைய நீதியைப் பெற்றுக்கொண்டு நீதிமான்களாக வாழும்படியான பாக்கியத்தை பெறுகிறவர்களாக இருக்கின்றோம்.

கிறிஸ்து இயேசுவை விசுவாசிக்கும்போது, கிறிஸ்து இயேசுவினால் தேவனுக்கு கீழ்படிகிற அனுபவத்தையும், தேவனுடைய மகிமையை பெற்றுக்கொள்கிற இடத்திற்கும் நாம் கடந்துவருகிறோம். இப்படிப்பட்டதான மேன்மையான ஆசீர்வாதங்களுக்கெல்லாம் அடிப்படை தேவனுக்கு கீழ்படிவதை நாம் தெரிந்துகொள்வதிலிருக்கிறது என்பதனை புரிந்து கீழ்படிதலை தெரிந்துகொள்வோம். கிறிஸ்து இயேசுவை பின்பற்ற ஆரம்பிக்கும்பொழுது தேவனுக்கு கீழ்படிவதென்பது நமக்கு கடினமாக இருக்காது. இவ்விதமாய்

இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவனோடு ஐக்கியம் கொள்கிறவர்களாகவும், தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டு, வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

## கேள்விகள்:

1. திருப்தியான வாழ்வு வாழ்தல், எவ்விதமாய் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்விற்கு ஆதாரமாக இருக்கின்றது என்பதனை விளக்கமாக கூறுக?
2. அங்கீகரிக்கப்பட்ட வாழ்வு வாழ்தல் என்பது எவ்வாறு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வோடு தொடர்புடையதாக இருக்கின்றது என்பதனை விளக்கமாக கூறுக?
3. நோக்கமுள்ள வாழ்க்கை எவ்விதமாக வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்விற்கு அவசியமானதாக இருக்கின்றது என்பதனை விளக்கமாக கூறுக?
4. தேர்ந்தெடுக்கும் திறன்பற்றியும் அதின் முக்கியத்துவத்தைப் பற்றியும் இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளை குறிப்பிடுக?
5. நாம் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதற்கு எதனை தேர்ந்தெடுத்து வாழவேண்டும் என்பதனையும், அதன் முக்கியத்துவத்தையும் விளக்கமாக கூறுக?